ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

பெரியாழ்வார் அருளிச்செய்த

# ॥ அலம்பாவெருட்டா ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ அலம்பாவெருட்டா ॥

## திருமாலிருஞ்சோலைச் சிறப்பு

‡அலம்பா வெருட்டாக்⋆ கொன்று திரியும் அரக்கரை⋆
குலம் பாழ் படுத்துக்⋆ குல விளக்காய் நின்ற கோன் மலை⋆
சிலம்பார்க்க வந்து⋆ தெய்வ மகளிர்கள் ஆடும் சீர்⋆
சிலம்பாறு பாயும்⋆ தென் திருமாலிருஞ்சோலையே (1)

வல்லாளன் தோளும்⋆ வாள் அரக்கன் முடியும்⋆ தங்கை
பொல்லாத மூக்கும்⋆ போக்குவித்தான் பொருந்தும் மலை⋆
எல்லா விடத்திலும் எங்கும் பரந்து⋆ பல்லாண்டொலி⋆
செல்லா நிற்கும் சீர்த்⋆ தென் திருமாலிருஞ்சோலையே (2)

தக்கார் மிக்கார்களைச்⋆ சஞ்சலம் செய்யும் சலவரைத்⋆
தெக்கா நெறியே போக்குவிக்கும்⋆ செல்வன் பொன்மலை⋆
எக் காலமும் சென்று⋆ சேவித்திருக்கும் அடியரை⋆
அக் கானெறியை மாற்றும்⋆ தண் மாலிருஞ்சோலையே (3)

ஆனாயர் கூடி⋆ அமைத்த விழவை⋆ அமரர் தம்
கோனார்க்கொழியக்⋆ கோவர்த்தனத்துச் செய்தான் மலை⋆
வானாட்டில் நின்று⋆ மாமலர்க் கற்பகத் தொத்திழி⋆
தேன் ஆறு பாயும்⋆ தென் திருமாலிருஞ்சோலையே (4)

ஒரு வாரணம்⋆ பணி கொண்டவன் பொய்கையில்⋆ கஞ்சன் தன்
ஒரு வாரணம்⋆ உயிர் உண்டவன் சென்றுறையும் மலை⋆
கரு வாரணம்⋆ தன் பிடி துறந்தோட⋆ கடல் வண்ணன்
திருவாணை கூறத் திரியும்⋆ தண் மாலிருஞ்சோலையே (5)

ஏவிற்றுச் செய்வான்⋆ ஏன்றெதிர்ந்து வந்த மல்லரை⋆
சாவத் தகர்த்த⋆ சாந்தணி தோள் சதுரன் மலை⋆
ஆவத் தனம் என்று⋆ அமரர்களும் நன் முனிவரும்⋆
சேவித்திருக்கும்⋆ தென் திருமாலிருஞ்சோலையே (6)

www.prapatti.com

மன்னர் மறுக⋆ மைத்துனன்மார்க்கொரு தேரின்மேல்⋆
முன் அங்கு நின்று⋆ மோழை எழுவித்தவன் மலை⋆
கொன்னவில் கூர்வேற் கோன்⋆ நெடுமாறந் தென் கூடற் கோன்⋆
தென்னன் கொண்டாடும்⋆ தென் திருமாலிருஞ்சோலையே (7)

குறுகாத மன்னரைக்⋆ கூடு கலக்கி⋆ வெங்கானிடைச்
சிறுகால் நெறியே போக்குவிக்கும்⋆ செல்வன் பொன் மலை⋆
அறுகால் வரி வண்டுகள்⋆ ஆயிர நாமம் சொல்லி⋆
சிறுகாலைப் பாடும்⋆ தென் திருமாலிருஞ்சோலையே (8)

சிந்தப் புடைத்துச்⋆ செங்குருதி கொண்டு⋆ பூதங்கள்
அந்திப் பலி கொடுத்து⋆ ஆவத்தனம் செய் அப்பன் மலை⋆
இந்திர கோபங்கள்⋆ எம்பெருமான் கனி வாய் ஒப்பான்⋆
சிந்தும் புறவில்⋆ தென் திருமாலிருஞ்சோலையே (9)

எட்டுத்திசையும்⋆ எண் இறந்த பெருந் தேவிமார்⋆
விட்டு விளங்க⋆ வீற்றிருந்த விமலன் மலை⋆
பட்டிப் பிடிகள்⋆ பகடுரிஞ்சிச் சென்று மாலைவாய்த்⋆
தெட்டித் திளைக்கும்⋆ தென் திருமாலிருஞ்சோலையே (10)

‡மருதப் பொழில் அணி⋆ மாலிருஞ்சோலை மலை தன்னை⋆
கருதி உறைகின்ற⋆ கார்க்கடல் வண்ணன் அம்மான் தன்னை⋆
விரதம் கொண்டேத்தும்⋆ வில்லிபுத்தூர் விட்டுசித்தன் சொல்⋆
கருதி உரைப்பவர்⋆ கண்ணங்கழலிணை காண்பார்களே (11)

‖ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ‖